REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணுதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: புரட்டாசி 26உ செவ்வாய் (12—10—54) ★ ★ வெளியூர்: புரட்டாசி 27உ புதன் (13—10—54) [இதழ் 103

"தற்காலிக அரசாங்கம்!"

பம்பாய், அக். 11—

போர்த்துகீசிய ஆதிக்கத்திலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ள நாகர்ஹாவேலியில், போர்த்துகீசிய ஆதிக்கத்திலிருக்கும் கோவா, டையூ, டாமன் ஆகிய பிரதேசங்களுக்காக ஒரு 'தற்காலிக அரசாங்கம்' நிறுவப்பட்டிருப்பதாக கோவா தேசீய வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

அந்தத் 'தற்காலிக அரசாங்க'த்தில் அங்கம் வகிப்போரின் பட்டியல் வெகு சீக்கிரமே வெளியிடப்படும் என்றும் தெரிகிறது.

இந்தத் 'தற்காலிக அரசாங்கம்,' இப்போது, டையூ, டாமன், கோவா ஆகிய பகுதிகளை விடுதலை செய்வதற்கான திட்டங்களை ஆராய்ந்துகொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

அடுத்த ஆண்டில் அகதிகள் தண்டச்செலவு ரூபாய் 25 கோடி!

கி. வங்க அகதிகளுக்கு மட்டும் ரூபாய் 12 கோடி!

பீகார் - ஒரிசா விடுதிகளிலிருந்து அகதிகள் வெளியேற்றம்!

மேற்கு வங்கத்தில் புதிய நெருக்கடி!

கல்கத்தா, அக். 12—

மேற்கு வங்க அகதிகளில், சுமார் 1,21,000 பேர்கள் மேற்கு வங்க தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். இது மேற்கு வங்கத்தில் வேலையில் உள்ள மொத்த தொழிலாளரில் 20 சதவிகிதமாகும்.

மேற்கு வங்கத்தில் உள்ள தொழிற்சாலைகள் நேரடியாக சுமார் 3 லட்சம் பேர்களை ஆதரித்து வருகின்றன.

அடுத்த ஆண்டில் மத்திய அரசாங்கம் செலவிடுவதாக உத்தேசித்துள்ள சுமார் 23 லட்சம் ரூபாயில் ரூ. 12 லட்சம் மேற்கு வங்க அகதிகளின் புனர்வாழ்விற்காகவே செலவிடப்படும் எனத் தெரிகிறது.

மத்திய அரசாங்க அகதிகள் பராமரிப்புஇலாக்கா ஆலோசகரான மேகர் சந்த் கன்னு என்பவர் இப்போது கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டிருப்பதினுல் மேற்கு வங்க அகதிகள் பிரச்சினை தீர்ந்து விடும் என நம்பப்படுகிறது.

வெள்ளப் பெருக்கினுல் கிழக்கு வங்கத்திலிருந்து ஓடிவரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகமாகி விட்டதாம்; ஆனுல் பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களிலுள்ள அகதிகளின் துயரங்களுக்குக் காரணம் என்ன என்பது இன்னமும் தெரிந்தபாடில்லையாம்!

கடந்த வாரத்தில் மட்டும் கல்கத்தாவிலிருந்து அகதிகளாக தினம் வந்தவர்களின் எண்ணிக்கை சராசரி 426 என்றும் சொல்லப்படுகிறது.

பீகார் ஒரிசா ஆகிய இடங்களில் உள்ள அகதிகள் பராமரிப்பு நிலையங்களிலிருந்து 1000 பேர் ஓடிவந்துவிட்டது மேலும் நெருக்கடியை அதிகரித்துள்ளதாம்.

இந்த மேற்குவங்க அகதிகள் பிரச்சினையையும் எழுந்துள்ள நெருக்கடியையும் உடனிருந்து கவனிக்க நியமிக்கப்பட்டுள்ள மேகர் சந்த் கன்னு, 'எனது சேவைகள் தேவைப்படும் வரையில் நான் இங்கிருப்பேன்,' என்று கூறியுள்ளார்.

அவரது வருகை, மாநில அரசாங்கங்களுடன் மத்திய அரசாங்கம், அகதிகள் புனரமைப்புப் பிரச்சினையில் ஒன்றுபட்டு வேலைகளைத் துரிதமாகச் செய்ய உதவும் ஒரு நல்ல தொடர்பு எனக் கருதப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க.)

தாய்லாந்து முஸ்லிம் - தலைவர்களைக் காணோம்!

தென் தாய்லாந்தை மலேயாவுடன் சேர்க்க வற்புறுத்தல்

பிரிவினைக் கிளர்ச்சியை அடக்க தாய்லாந்து சர்க்கார் நடவடிக்கை

பாங்காக், அக், 12—

தென் தாய்லாந்து முஸ்லிம் மக்களின் தலைவர்களான ஹாஜி சூலங், வாஹ் சமேஹ், சேஹாக் என்னும் மூவரையும் கடந்த சில தினங்களாகக் காணவில்லை என்று தெரிகிறது.

இவர்கள் காணவில்லை என்ற செய்தி தாய்லாந்து முஸ்லிம் மக்களிடையே மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது. இவர்களுடன் ஹாஜி சூலங்கின் 15 வயது மகன் முகமதுவையும் காணவில்லையாம்.

காணுமற்போயுள்ள 3 பேரும், தென் தாய்லாந்து முஸ்லிம் மக்களின் அன்புக்குப் பாத்திரமான தலைவர்கள் என்று தெரிகிறது.

இவர்கள் முஸ்லிம்கள் பெருவாரியாக வாழும்தாய்லாந்தின் தென் பகுதியைப் பிரித்து மலேயாவுடன் இணைக்க வேண்டுமென்று மிகப் பெரிய இயக்கமொன்றை நடத்துகிருர்கள்.

மலேயாவில் உள்ள முஸ்லிம்களின் கலாச்சார பண்பாடுகளுக்கும், தென் தாய்லாந்து மக்களின் கலாச்சார பண்பாடுகளுக்கும் நல்ல ஒற்றுமை காணப்படுகிறது என்றும், ஆகவே, தென் தாய்லாந்தை மலேயாவுடன் இணைப்பதுதான் முஸ்லிம் மக்களின் உயர்வுக்கு சிறந்த வழி என்றும் இவர்கள் கூறுகின்றனர்.

1948-ல், தாய்லாந்து சர்க்கார் ஹாஜி சூலங் மீது, தேசத் துரோகம், பிரிவினைக்குத் தூண்டுதல் ஆகிய குற்றங்களுக்காக நான்காண்டு காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். 1952-ல் இவர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட பின்னர் இவரைப் பற்றிய செய்திகள் ஏதும் தெரியவில்லை.

மூன்று நாட்களுக்கு முன்னர் ஹாஜி அவர்களின் மனைவியார் தன் கணவனைத் தேடி பாங்காக் சென்றபோது, தன் கணவரையும் அவரது நண்பர்களையும், சாங்க்லா போலீஸ் நிலையத்திற்கு வருமாறு போலீசார் சிலர் அழைத்தனர் என்றும் அவர்களுடன் சென்ற தன் கணவர் திரும்பவில்லை என்றும் அந்த அம்மையார் கூறுகிருர்.

சாங்க்லா போலீசார்,தாங்களோ, அல்லது பாங்காக் அரசாங்கமோ, ஹாஜியைப் போலீஸ் நிலையத்திற்கு வருமாறு அழைக்கவில்லை என்று கூறுகின்றனர்.

முஸ்லிம்களின் தலைவர்கள் காணுமற்போனதை ஒட்டி நாட்டிலே கலகம் ஏற்படாமல் தடுக்கவும், முஸ்லிம்களின் பிரிவினை இயக்கத்தை ஒடுக்கவும் தாய்லாந்து சர்க்கார் தீவிர நடவடிக்கைகள் எடுக்கின்றனர்.

பெருவாரியான தோட்டத் தொழிலாளர்களைக் கொண்ட தென் தாய்லாந்தில் அபிவிருத்தித் திட்டங்கள் பல உடனடியாக அமுல் செய்யப்படுகின்றன.

அங்கே வாழும் முஸ்லிம் மக்களுக்கு 'தாய்' மொழி தெரியாததால் 'தாய்' மொழியை அவர்களுக்குக் கற்பிக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

மொழியைக் கற்பதின் மூலம், ஒரே பகுதியில் குவிந்துள்ள முஸ்லிம் மக்கள், தாய்லாந்து முழுமையும் பரந்து வாழ சந்தர்ப்பம் ஏற்படுமென்றும், அப்போது பிரிவினை பற்றிய கிளர்ச்சி மறைந்து போகுமென்றும் தாய்லாந்து சர்க்கார் நம்புகின்றனர்.

ஜெர்மன் இராணுவம் அதிகரிப்பு!

மே. ஜெர்மன் தொழிலாளர் எதிர்ப்பு

பிராங்பர்ட்டில் நடைபெற்ற மேற்கு ஜெர்மன் தொழிலாளர் கழகங்களின் வருடாந்திர மாநாடு, தற்போது ஜெர்மனியை இராணுவமயமாக்குவது கூடாது என்றும், ஜெர்மனியின் எதிர்காலம் பற்றிய பேச்சுவார்த்தைகள் இன்னும் முடிவடையாமல் இருப்பதால், இப்போது ஜெர்மனியின் இராணுவ பலத்தை அதிகரிக்கச் செய்யும் முயற்சிகள் ஜெர்மனியின் ஒற்றுமைக்கான ஏற்பாடுகளைக் குலைக்கும் என்றும் தெரிவித்திருக்கிறது.

இந்தத் தொழிலாளர் அமைப்பில், மேற்கு ஜெர்மனியில் 60 லட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

வாக்குறுதியை காக்காதவரை வாரி அணைத்துக் கொள்ளும் காங்கிரஸ்!

சொந்தக் கட்சி வாக்கை மீறியவரின் பதவியை பறிக்கிறது!

எர்ணுகுளம், அக். 11—

திருவாங்கூர் காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரும், டில்லி மேல் சபை உறுப்பினருமான சி. நாராயண பிள்ளை என்பவர் காங்கிரசிலிருந்து இரண்டு ஆண்டு காலம் விலக்கி வைக்கப்பட்டிருப்பதுடன், தனது மேல் சபை உறுப்பினர் பதவியையும் ராஜினமாச் செய்து விடும்படி கோரப்பட்டிருக்கிருர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

"காங்கிரசிற்கு எதிரான காரியங்களைச் செய்தார்" என்ற திரு-கொச்சிப் பிரதேச காங்கிரசின் குற்றச்சாட்டிற்கு இலக்கான அவர், திரு—கொச்சி காங்கிரஸ் கமிட்டியின் வேண்டுகோளின்படி, இரண்டாண்டு காலத்திற்கு காங்கிரஸ் உறுப்பினராயிருப்பதினின்றும் விலக்கி வைத்திருப்பதாக அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பண்டித நேரு உத்தரவிட்டுள்ளார் என்று நம்பகமாகத் தெரிகிறது.

பாக். மந்திரிக்குக் கருப்புக் கொடி!

பெஷாவரில் ஆர்ப்பாட்டம்!

பாகிஸ்தான் மத்திய அரசாங்க, உணவு, தொழில் இலாகா மந்திரியான கான் அப்துல் கைய்யூம் கான், பெஷாவர் வந்தபொழுது, ஏராளமான பேர் கூடிநின்று கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்று தெரியவருகிறது.

போலீசார் தந்த மரியாதை அணிவகுப்பைப் பார்வையிடச் செல்லும் வழி நெடுக மந்திரியாருக்குக் கருப்புக் கொடி காட்டப்பட்டதாகத் தெரிகிறது.

"கருப்புக் கொடி காட்டுவதின் மூலம், இந்த மாகாண மக்கள் மத்திய உணவு மந்திரியை விரும்பவில்லை என்பதைக் காட்டினர்," என்று பெஷாவர் ஜில்லா முஸ்லிம் லீக் தலைவர் குறிப்பிட்டார்.

கருப்புக் கொடி நிகழ்ச்சி பற்றி அப்துல் கைய்யூம் கான் பேசுகையில், "இது முஸ்லிம் லீகில் உள்ள சிலரின் வேலை; ஆனுல், அவர்கள் அதிலே தோல்வி கண்டுவிட்டனர்" என்று பத்திரிகை நிருபர்களிடம் கூறியதாகவும் தெரிகிறது.

ஆனுல் மாநில அரசாங்கம் விடுத்த பத்திரிகைக் குறிப்பொன்று, "கிராமங்களிலிருந்தெல்லாம் வந்திருந்த கணிசமான அளவு மக்கள் கருப்புக் கொடி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்; அவர்கள் எல்லாரும் கருப்புக் கொடி ஏந்தி, மந்திரிக்கு எதிரான கோஷங்களை முழங்கினர்; அவர்கள் ஊர்வலமாகச் சென்றபொழுது கூட்டம் இன்னும் பெரிதாகிவிட்டது; அவர்களைக் கலைந்து போகுமாறு கட்டாயப்படுத்துவதற்கு வெகுவாகக் கஷ்டப்பட வேண்டியிருந்தது," என்று கூறுகிறது.

ஆந்திராவில் புதிய தேர்தல்!

மந்திரி சபை அஞ்சி அஞ்சி வேலை செய்கிறதாம்

விவசாய மந்திரி திம்மா ரெட்டி அறிவிப்பு

கர்னூல், அக். 11—

ஆந்திர சட்ட சபைக்கு புதியதொரு தேர்தல் நடத்துவதை தான் விரும்புவதாக ஆந்திர விவசாய மந்திரி திம்மா ரெட்டி பேசியுள்ளார்.

காந்தியாரின் லட்சியங்களை நடைமுறைக்குக் கொணர எண்ணும் ஒரு கட்சி ஆட்சியிலிருக்க வேண்டுமா அல்லது குழப்பங்களை உண்டுபண்ணிக் கொண்டிருக்கும் ஒரு கட்சி ஆட்சியிலிருக்க வேண்டுமா என்பதை மக்கள் திட்டவட்டமாக முடிவு செய்து தீர்ப்பளிப்பதற்கு இப்படி புதியதாக தேர்தல் ஒன்றை நடத்துவதே நலம் என்று தான் கருதுவதாக அவர் கூறினுர்.

இன்னும் ஆறுமாத காலத்தில் புதிய தேர்தல் நடத்தப் பெறலாம் என்றும், இப்போதுள்ள மந்திரி சபை தினம் தினம் பயந்து பயந்து வேலை செய்யவேண்டி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தேசீய விஸ்தரிப்புத் திட்டம் ஒன்றைத் துவக்கிவைத்து அவர் மேலும் பேசுகையில், அண்மையில் நடைபெற்றதுபோன்ற 'சத்தியாக்கிரகங்களை' மக்கள் ஆதரிக்கக் கூடாதென்றும் கேட்டுக்கொண்டார்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 12—10—1954 செவ்வாய்

துணிவு கொள்ள வேண்டும்!

திரு—தமிழகப் பகுதிகள் சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்பதற்காக, திரு—தமிழர்கள் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். விடுதலை விரும்பிகளைச் சுட்டுக் கொல்வது, சிறையில் தள்ளி மூடுவது, பொய்யான சதி வழக்குகளை உருவாக்குவது போன்ற கோரமான கொடுமைகளைச் செய்து வருகிறது—ஒரு ஆட்சியின் இயல்பே அதுதான் என முடிவுகட்டிக் கொண்டிருக்கிற பட்டம் தாணுவின் சோஷலிஸ்ட் கட்சி ஆட்சி!

தங்களுடைய நியாயமான கோரிக்கையைப் பெற முடியாது, திரு-தமிழர்கள் கொண்டிருக்கிற வேதனையோடு, அவர்களுடைய உயிரான கோரிக்கையையே சிதைத்து விடலாம் எனும் அற்ப நினைப்பில், தாணு ஏவிய அடக்குமுறை வழங்கிய வேதனையும் ஒன்று சேர்ந்து, திரு-தமிழர்களின் நியாயமான உரிமை வேட்கையே, வேறு வகையில் விகார சொரூபம் பெற்று விடுமோ என நல்லெண்ணம் படைத்தவர்கள் அஞ்ச வேண்டியதாக இருக்கிறது. அவ்வாறு அஞ்சத்தக்க ஒரு சூழ்நிலை எதிர்காலத்தில் திரு—கொச்சியில் ஏற்படுவதும், ஏற்படாமல் இருப்பதும், பட்டம் தாணுவின் போக்கில் காணப்பெறும் மாற்றத்தைப் பொறுத்திருக்கிறது.

ஆனால், பட்டம தாணுவோ, ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கிறோம் என்ற ஆணவ மூளைப்பில், அறிவிழந்து, திரு-தமிழர்களின் புண்பட்ட உள்ளத்தை, மேலும் மேலும் புண்படுத்துவதையே பதவிப் பயனாகக் கொண்டு நடந்து வருகிறார். இரண்டு திங்களுக்கு முன் முதல் அமைச்சர் என்ற முறையில் அவர் நடத்திய படுகொலையை ஆராய்ந்து அறிய எழுந்த கோரிக்கையை நிறைவேற்ற, ஒரு மலையாளியை நியமிப்பதின் மூலம், திரு—தமிழர்களின் உள்ளக் கொதிப்பை முன்னிலும் கூடுதலாகக் கிண்டி விட்டிருக்கிறார்.

துப்பாக்கியைப் பிரயோகிக்காமலே நிலைமையை கவனித்து இருக்க முடியுமா, துப்பாக்கிப் பிரயோகத்தில் எந்த அளவு போலீஸ் படை வரம்பு கடந்து நடந்துகொண்டிருக்கிறது, என்பன போன்ற உண்மைகளைக் கண்டறிவதற்குத்தான் ஒரு விசாரணைக் குழுவைக் கோருவதும், அக்கோரிக்கையை செயலாற்ற ஒரு ஆட்சியாளர் முன் வருவதும் உலக நடைமுறையாகும். அவ்வாறு நியமிக்கப்படும் விசாரணைக் குழுவில், நடுநிலை தவறாத நியாய புத்தி படைத்த நேர்மை நோக்கமுடையவர்கள் இடம் பெற்றால்தான், ஒழுங்கான விசாரணைக்கும், நடந்ததை நடந்தவாறு அறிந்து, குற்றத்தையும் குணத்தையும் கண்டுணர்ந்து முடிவு கூறுவதற்கும் இடமேற்படும். அம்முடிவைத்தான், பாதிக்கப் பட்டவர்களாலும் ஓரளவிற்கு ஒப்புக்கொள்ள முடியும். அதை விடுத்து, நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைப்பது போல், திரு—தமிழர் கோரிக்கையில் எதிர்ப்பான கோட்பாடுடைய ஒருவரை, அதே எதிர்ப்புக் கோட்பாடு கொண்ட ஆட்சியாளர்களால் இழைக்கப்பட்ட கேடுகளின் உண்மையைக் கண்டறிந்து கூற, பட்டம் தாணு நியமித்து இருப்பது, திரு—தமிழர்களின் துயர் துடைக்க அல்லவே அல்ல என்பதும், அது, மற்ற வட்டார மக்களை ஏமாற்றும் ஒரு கண்கட்டி வித்தை என்பதும் வெட்டவெளிச்சமாகும்.

துப்பாக்கிப் பிரயோகத்தை விசாரித்தறிய நியமிக்கப்பட்டுள்ள மலையாள நீதிபதி, நடுநிலை தவறாத உயர் பண்பு கொண்டவராக இருக்கலாம். ஆனால், அவர் ஒரு மலையாள மொழியினராக இருப்பதால், அவரையும், அவர் விசாரணையில் நியாயமிருக்கும் எனவும், திரு—தமிழர்கள் நம்ப மறுப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

திரு—கொச்சியில் இரு மொழியினரிடத்திலும், அந்த அளவு அவநம்பிக்கை ஏற்பட்டு வளர்ந்து வந்திருப்பதற்கு, ஏற்கனவே இருந்த காங்கிரஸ் ஆட்சியும், அதைத் தொடர்ந்து ஆட்சியிலுள்ள பட்டம் தாணுவின் ஆட்சியுமே காரணமாகும்.

இத்தகு சூழ்நிலையில் தமிழர்களுக்கு, ஆட்சியாளர்களால் இழைக்கப்பட்ட கொடுமையின் தராதரத்தைக் கண்டறிந்து கூற, ஒரு மலையாள மொழியினரை நியமித்தால், அவர் எவ்வளவு நேர்மைத் திறம் படைத்தவராக இருந்த போதிலும, அவர் விசாரணையில் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயம் கிடைக்கும் என திரு—தமிழர்கள் நம்ப மறுத்துவிட்டதிலோ, அவர் விசாரணை புறக்கணிக்கப்பட்டு விட்டதிலோ, பிறர் குறை காண வேண்டிய நிலை எதுவும் இருப்பதாக நம்மால் கொள்ள முடியவில்லை. நிற்க,

திரு—கொச்சியில் பட்டம் தாணுவின் ஆட்சி நிலைத்து இருப்பதற்கே, காங்கிரசின் பக்க பலம்தான் காரணமாகும். திரு—தமிழர் கோரிக்கையை பட்டம் தாணுவின் மக்கள் சோஷலிஸ்டு கட்சியும் காங்கிரஸ் கட்சியும் ஒரு கண் கொண்டுதான் நோக்குகின்றன என்பதை அனைவரும் அறிவர்.

திரு—தமிழர்கள் மீது, பட்டம் தாணு நடத்திய துப்பாக்கி ஒத்திகையில் காங்கிரசிற்கு உடன்பாடு இருக்கவில்லையானால், அவராட்சிக்குக் கொடுத்துவரும் ஆதரவை, அக்கட்சி என்றோ மறுத்துவிட்டு இருக்கும். அப்படி ஒரு நிலை ஏற்பட்டு இருந்தால், ஏற்பட்டுவிடக் கூடுமோ என அச்சத்திற்கு இடம் இருந்தாலும் கூட, பட்டம் தாணு, திரு—தமிழர்களை வேட்டையாடக் கிளம்புமுன், நன்றாக சீர்தூக்கிப் பார்த்தே, அவ்வேட்டையில் இறங்கி இருப்பார் என்பதில் ஐயமில்லை. ஆனால், திரு—கொச்சி காங்கிரசிற்கும், திரு—தமிழகம் சென்னை மாநிலத்துடன் இணைவதில் விருப்பமில்லாததினால் தான், தாங்கள் அதிகாரத்திலிருந்தால், திரு—தமிழர் கோரிக்கை விஷயத்தில் எவ்வாறு நடந்து கொண்டிருப்போமோ, அதே போன்று, பட்டம் தாணுவும் நடந்துகொண்டு, அதனால் கிளம்பும் பழியும், மாசும் தம்மை வந்து அணுகாமல் தடுத்து, ஒரே காலத்தில், தமக்கு இருவகை நன்மைமையைத் தேடித் தருகிறாரே என, திரு—கொச்சி காங்கிரஸ் உள்ளூர மகிழ்ந்து கொண்டு இருக்கிறது. அதாவது, திரு — தமிழர்களும் பழிவாங்கப்படுகிறார்கள்; அவ்வாறு பழி வாங்கப் படுவதால் உண்டாகிற பகையும், வெறுப்பும் காங்கிரஸ் கட்சியைத் தீண்டாமல் இருக்கிறது; என மகிழ்ந்து, பட்டம் தாணுவின் பயங்கரமான ஆட்சிக்கு ஒத்து ஊதிக்கொண்டு இருக்கிறது திரு—கொச்சி காங்கிரஸ்!

திரு—கொச்சி காங்கிரசின் இக்கெடுமதியை நன்கு உணர்ந்து, இனியும் அக்காங்கிரசையோ, அதனைப் பெற்று பேணிவரும் அகில இந்திய காங்கிரசையோ, தங்கள் கோரிக்கையைப் பெற நம்பிக் கொண்டிருப்பதை விட்டுத் தொலைக்க, திரு—தமிழக காங்கிரஸ் துணிவுகொள்ள வேண்டும். அத்துணிவு என்று பிறக்கிறதோ, அன்றுதான், சென்னை மாநிலத்துடன் இணையும் நற்பேற்றினை திரு-தமிழகம் பெறுவது இலகுவாகும் என்பதே நமது கருத்து.

பண்டிதரின் 'ஒற்றுமை' கீதம் -ஒரு ஏகாதிபத்திய வாதம்!

வடக்கும்-தெற்கும், அவரே காணும் திசை மாற்றம்!

திராவிடரின் 'விடுதலை வாழ்வு' குறித்து சம்பத்

"நெப்போலியனும், இட்லரும் 'விடுதலை' என்ற புனிதமான சொல்லை உபயோகித்து, 'ஐரோப்பாவை ஒன்று படுத்துகிறேன்,' என்ற போர்வையில் எந்த இழிசெயல்களைப் புரிந்தார்களோ, அதே 'விடுதலை' என்ற புனித வார்த்தையைப் பயன்படுத்தி, 'இந்திய ஒற்றுமை' (Unity of India) என்ற போர்வையில், பண்டித நேருவும், தென்னாட்டை அடிமை கொண்டிருக்கிறார். நெப்போலியனும், இட்லரும் தோல்வி கண்ட இடத்திலே நின்று கொண்டு, நேரு இந்திய ஒற்றுமை குறித்துப் பேசுகிறார்.

"அசோகன்—இந்தியாவை ஆண்ட அந்த மன்னன்—இன்று மக்களால் புகழப்படுவதற்குக் காரணமெல்லாம், அவன் ஒரு மகா சக்ரவர்த்தியாயிருந்தான் என்பதால் அல்ல; மாறாக, கலிங்கப் போருக்குப் பின் அவன், 'நான் இனி வாளைத் தொடேன்; இனி போர் புரியேன்' என்று கூறினனே, அதற்காகத்தான் புகழப்படுகிறான்; 'இனி போர் புரியேன்,' என்று கூறியது கண்டு நேரு வருந்துகிறார்; அசோகன் கூறிய வார்த்தைகளுக்காக, நேரு, அவனைப் பாராட்டவில்லை—மாறாக வருந்துகிறார்."

—இவ்வாறு, சூளை சௌந்திரபாண்டியன் நினைவுப் படிப்பகத்தின் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் குறிப்பிட்டார். (சொற்பொழிவின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது.)

'இந்திய ஒற்றுமை' என்ற தலைப்பில், பண்டித நேரு எழுதிய கட்டுரைகளும், ஆற்றிய சொற்பொழிவுகளும் தொகுத்து புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளன: அவற்றிலிருந்து சில பகுதிகளை அவ்வப்போது நான் சொல்லுகிறேன் :—

"........அன்று இருந்த நிலைகளில், இந்தியா, அரசியல் ரீதியாகப் பல துண்டுகளாகப் பிரிந்திருந்தது தவிர்க்க முடியாததாயிருந்ததென்பது உண்மைதான்; என்றாலும், இந்தியாவில் அரசியல் ஒற்றுமை வேண்டுமென்ற எண்ணம் தொடர்ந்து இருந்து வந்தது; பேரரசர்களும் மன்னர்களும் அந்த ஒற்றுமையைக் காண விழைந்தனர்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அசோகன் இந்த ஒற்றுமையைப் பெற்றான்; இன்று பிரிட்டனின் ஆதிக்கத்திலிருக்கும் நிலப்பரப்பைக் காட்டிலும் பெரியதோரு நிலப்பரப்பில் அவன் தன்னுடைய சாம்ராஜ்யத்தை நிறுவியிருந்தான். அதில் மத்திய ஆசியாவும், ஆப்கானிஸ்தானும் அடங்கியிருந்தன; தென்னிந்தியாவின் ஒரு சிறு பகுதி மட்டும் அந்த சாம்ராஜ்யத்திலிருக்கவில்லை; தாம் நடத்திய போரில் ஏற்பட்ட வெற்றியின்போது கண்ட அழிவுகள், அசோகனை மேலும் தொடர்ந்து போரிடச் செய்யாது தடுத்ததே அதற்குக் காரணமாகும்."

இவை பண்டித நேருவின் வாசகங்கள்.

அசோகன், தென்னிந்தியாவையும் போரிட்டு வென்று, முழு அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டாது போய்விட்டானே என்று பண்டிதர் வருத்தப்படுகிறார்.

நேரு பண்டிதர் குறிப்பிடுகிறாரே—'அசோகனின் சாம்ராஜ்யத்தில் அடங்காத சிறு பகுதி தென்னிந்தியா' என, அதுதான் நாம் வாழும் திராவிடம்—அதுதான் இன்று நாம் கோரும் திராவிடம்! 'இதையும் அசோகன் ஆட்கொண்டு அடிமை கொள்ளவில்லையே,' என்று பண்டிதர் வருந்துவதின் மூலம், பண்டித நேரு எத்தகைய 'ஆதிக்க வெறியர்' என்பதைத் தெரிந்துகொள்ளவில்லையா என்ன?

பண்டித நேரு மேலும் கூறுகிறார் :—

"இந்தியாவில் பூரணமான அரசியல் ஒற்றுமையை உண்டாக்கியவர்கள் வெள்ளையர்கள்தான்,'

—என்று!

அவர்கள் உருவாக்கிவிட்டுப் போன இந்திய தேசப் படத்தை, 'ஆதிக்க நிறம் 'கொண்டது,' என்று குற்றம் சாட்டிய பண்டிதர், அதே படத்திலிருக்கும் நிலப் பரப்பில் ஒற்றுமை காண விழைகிறார்.

இந்தச் செயலை நாம் என்னவென்று கூறுவது?

நெப்போலியனுக்கும், இட்லருக்கும் தீர்ப்புச் சொல்லிய வரலாற்று ஆசிரியர்கள் நேருவின் இந்தச் செயலுக்கும் தீர்ப்புச் சொல்லத்தான் போகிறார்கள்!

இன்று ஜொலித்துக் கொண்டிருக்கிற பண்டித நேரு, நாளை, வரலாற்று ஆசிரியர்களால், குற்றவாளிக் கூண்டில், கைகளில் வெள்ளிக் காப்புக்களுடன், 'ஆதிக்க வெறியன், ஏகாதிபத்தியவாதி,' என்று குற்றம் சாட்டப்படத்தான் போகிறார்!

இன்று நம்மைப் பலர் கேட்கிறார்கள்—'ஏன் நாம் தென்னாடு—வடநாடு என்று பிரித்துப் பேசுகிறோம்'—என்று!

பண்டித நேரு பேசுவதைக் கேளுங்கள் :—

"...........இக்கட்டுரையை எழுதுகிறவர் (பண்டித நேரு) இந்தியாவில் எல்லாப் பாகங்களிலும் பொதுக்கூட்டங்களில் பேசியிருக்கிறார்; அப்பொழுதெல்லாம் அவர், தென்னிந்தியாவைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் இந்துஸ்தானியில் பேசியதைப் புரிந்து கொண்டிருக்கின்றனர்."

என், பண்டிதர், தென்னிந்தியாவில் இந்தியில் பேசவில்லை? தென்னிந்தியாவில் மட்டும் பண்டிதர் இந்தியில் பேசாதமைக்குக் காரணம் என்ன? இங்கு பேசினால் புரியாது என்பதைத் தவிர வேறென்ன இதற்குக் காரணமிருக்க முடியும்?

மேலும் அவர் சொல்லுகிறார்:—

"இந்தியாவில் சுமார் 12 மொழிகளிருக்கின்றன; இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன; அவை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்—இந்தோ - ஆரிய மொழிகள் என்றும், திராவிட மொழிகள் என்றும்! இந்தோ - ஆரிய மொழிகள வடக்கு, மத்திய, மேற்கத்திய இந்தியாவில் வழங்குகின்றன; திராவிட மொழிகள், தெற்கிலும் கிழக்கிலும் வழங்குகின்றன; இந்தோ - ஆரிய மொழிகள் எல்லாம் சமஸ்கிருதத்தை மூலம மொழியாகக் கொண்டவை; அவற்றில் ஏதேனும் ஒரு மொழியைக் கற்றுள்ளவர், மற்ற மொழிகளை சுலபமாகக் கற்றுக் கொள்ள முடியும்; திராவிட மொழிகள் இந்த இந்தோ - ஆரிய மொழிகளினின்றும் வேறுபட்டவை; ஆனால், அவற்றில் ஒவ்வொன்றிலும் சுமார் 50 சதவிகிதத்திற்கு அதிகமான சமஸ்கிருத வார்த்தைகள் இருக்கின்றன."

இவை பண்டிதரின் வாசகங்கள்.

திராவிடம் என்ற சொல் எங்கே என்று இன்றுகூட பலர் கேட்கிறார்களே, அவர்களுக்கு, பண்டிதர் கூறியிருப்பது இடித்து இடித்துக் காட்டவில்லையா?

பண்டிதர், ஏன், திராவிட மொழிகள், இந்தோ—ஆரிய மொழிகள் என்று பிரித்துப் பேச

(4-ம் பக்கம் பார்க்க.)

சினிமா தியேட்டர்களில் செய்திப் படங்கள் காண்பிக்க வேண்டாம்!

பிலிம் வர்த்தக சபை தீர்மானம்

"சினிமா தியேட்டர்களில், செய்திப் படங்களைத் திரையிட வேண்டுமென்று சர்க்கார் கட்டாயப்படுத்துவது, அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்து விட்டதால், சென்னை, ஆந்திர மாநிலங்களிலுள்ள எல்லா சினிமா தியேட்டர்காரர்களையும், இனிமேல் சர்க்கார் செய்திப் படங்களைத் திரையிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள வேண்டும்."

என்று, சமீபத்தில் கூடிய தென்னிந்திய பிலிம் வர்த்தக சபை முடிவு செய்திருக்கிறது.

செய்திப் படங்களைத் திரையிட வேண்டும் என்ற சென்னை சர்க்காரின் உத்திரவை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுத்து வெற்றி பெற்ற சேஷாத்ரி என்பவர், தமது தியேட்டர்களில், இப்போது அந்தச் செய்திப் படங்களைக் காட்டுவதை நிறுத்திக்கொண்டு விட்டார்.

பத்திரிகை நிருபர் ஒருவரிடம் அவர் பேசுகையில், "சினிமாப் படம் திரையிடப்படும் நேரம் தியேட்டர்காரர்களுக்கு முக்கியமானது; அந்த நேரத்தில், செய்திப் படங்கள் காட்டப்பட வேண்டுமானால், தியேட்டர்காரர்களுக்கு ஏதாவது ஒரு தொகை தரப்பட வேண்டும்; ஆனால் இதற்கு நேர்மாறாக, தியேட்டர்காரர்களே சர்க்காருக்கு இப்படங்களைக் காண்பிக்கப் பணம் கொடுக்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்." என்று குறிப்பிட்டார்.

கோவூர் உயர்நிலைப் பள்ளி

புதிய கட்டிடம் கட்டப்படுகிறது

சென்னை, அக். 10—

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த, கோவூர் போர்டு உயர்நிலைப் பள்ளிக்கான கட்டிடத்தின் ஆரம்ப வேலைகளை, சென்னை முதல் அமைச்சர் கே. காமராசர் நடத்திவைத்தார்.

விழாவிற்கு, சென்னை சட்டசபை உறுப்பினர் என். ராமகிருஷ்ண ஐயர் தலைமை வகித்தார்.

இப்பள்ளிக்கு, தோழர் ஏ. சோமசுந்திரம் (செட்டியார்) ரூ. 10,000- நன்கொடை வழங்கியிருக்கிறார். மத்திய சர்க்கார், அபிவிருத்தித் திட்டங்களின் கீழ், அதே தொகையை வழங்கியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

தேர்தலில் தலையிடுகிறார்கள்!

ரஷியர் மீது ஆஸ்திரியர் குற்றச்சாட்டு

ஆஸ்திரியாவின் பாராளுமன்றத்திற்கு நடைபெற்றத் தேர்தல்களில், சோவியத் அதிகாரிகள் தலையிட்டனர் என்று ஆஸ்திரிய உள்நாட்டமைச்சர் ஹெர் ஆஸ்கர் ஹெல்மர் குற்றம் சாட்டியுள்ளார்.

சோவியத் பகுதியில் நடைபெற்றப் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் ஹெர் ஹெல்மர், தேர்தல் கூட்டங்களைத் தடுக்க வேண்டுமென்றும், தேர்தல் பற்றிய சுவரொட்டிகளைக் கிழித்து எறியுமாறும், ரஷியர்கள் ஆஸ்திரியப் போலீசாருக்குக் கட்டளையிட்டனர் என்று கூறினார்.

கீழ் ஆஸ்திரியப் பகுதிகளில், முக்கிய அரசியல் கட்சியான, 'சுதந்திர லீகின்' தேர்தல் சுவரொட்டிகளை அகற்றுமாறு சோவியத் அதிகாரிகள் உத்திரவிட்டது பற்றிய போலீஸ் அறிக்கைகளை ஆஸ்திரியப் பத்திரிகைகள் வெளியிட்டன. இக்கட்சியைச் சேர்ந்த பல பொதுக்கூட்டங்களை சோவியத் தளபதி தடுத்திருக்கிறார்.

"ஜெர்மனியிலிருந்து துருப்புக்களைத் திரும்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று மாலடோவ் கூறும் நேரத்தில், ஆஸ்திரியாவில் உள்ள துருப்புக்களையும் வெளியேற்ற அவர்கள் முயற்சிப்பார்கள் என்றுதான் நாங்கள் கருதுகிறோம்" என்று ஹெர் ஹெல்மர் கூறினார்.

திரு-கொச்சி சர்க்கார் மீது தமிழர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர்!

நாடார் சங்கக் குழுவின் அறிக்கை

திருநெல்வேலி, அக். 7—

"திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களில் மூன்றில் இரண்டு பங்கினர் நாடார் வகுப்பினர்கள் ஆவர்; திரு—கொச்சியில் வாழும் தமிழர்கள் அனைவரும்—குறிப்பாக நாடார் வகுப்பினர்—தற்போது அங்கே ஆட்சி செலுத்தும் சர்க்கார், அதன் போலீஸ், அதன் நீதி வழங்கும் அமைப்பு இவைகளில் நம்பிக்கையற்று இருக்கிறார்கள்; அவர்கள் அனைவரும் தற்போது அங்கே நடத்தப்பட இருக்கும் நீதி மன்ற விசாரணையைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளனர்"

—என்று அண்மையில் திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்து திரும்பியுள்ள தக்ஷிணமாற நாடார் சங்கக் குழு, தன் அறிக்கையில் கூறியுள்ளது.

திரு—கொச்சியில் தமிழர்கள் மீது நடைபெறும் போலீஸ் அடக்குமுறைகளைப்பற்றி ஆராய அந்தக்குழு அனுப்பப்பட்டது. அக்குழுவில் தோழர்கள் பி. எஸ். இராஜபாள வீரமுத்து, எஸ். எம். ஜோசப், என். துரையப்பன் ஆகியோர் உள்ளனர்.

திரு—கொச்சியில் நடைபெறும் போலீஸ் அடக்குமுறைகளை உடனே நிறுத்துவதற்கு மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், மக்கள் மனதில் அப்பொழுதுதான் நம்பிக்கை ஏற்படுமென்றும், திரு—கொச்சி சர்க்கார் தொடுத்துள்ள வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற வேண்டுமென்றும், அல்லது வழக்குகள் தொடுப்பதைச் சீக்கிரம் முடிக்க வேண்டுமென்றும், இந்த நிலைமை ஏற்பட்டால் போலீசாரின் அடக்குமுறைக்குப் பயந்து இப்போது வெளியில் சென்று வாழும் மக்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப வாய்ப்புக் கிடைக்குமென்றும் அக்குழு தனது அறிக்கையில் மேலும் கூறியிருக்கிறது.

திரு—கொச்சியில் உள்ள தமிழர் வாழும் பகுதிகளை உடனே தமிழ் நாட்டுடன் இணைப்பதைத் துரிதப்படுத்த வேண்டுமென்றும், இணைப்பு துரிதப்படுத்தப்பட்டால், மலையாளர்-தமிழரிடையே உள்ள வெறுப்பு குறையுமென்றும் அக்குழுவினர் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஜைன கோவில்கள் மூடப்பட்டன!

தாழ்த்தப்பட்டோர் நுழைவதைத் தடுக்க சனாதனிகள் நடவடிக்கை

குவாலியர், அக். 10—

தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளே அனுமதிக்கப்படுவதைத் தடுக்க, ஜைன கோவில்கள் அனைத்தையும் கோவில் அதிபர்கள் மூடிவிட்டனர்.

தசரா விழாவின் இறுதியில், தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமையை நிலைநாட்ட ஜைனக் கோவில்களில் நுழைய ஊர்வலமாகச் சென்றார்களாம். அவர்கள் இந்து கோவில்களுக்குள் நுழைந்தார்கள் என்றும், ஆனால், அவர்கள் நுழைவதை கோவில் அதிபர்கள் தடுத்துவிட்டார்கள் என்றும் தெரிகிறது.

அரிசன கோவில் நுழைவுக் குழுவின் தலைவரான தோழர் அஹ்ரடிலால் ஜாதங், அரிசனங்கள் கோவிலில் நுழைய பலாத்காரத்தைக் கடைப்பிடிக்க மாட்டார்கள் என்று ஜைனர்களுக்கு உறுதியளித்து, மகாவீராவின் கோவில்களில், அரிசனங்கள் தொழுவதற்கு அனுமதிக்கவேண்டுமென்று கோரி அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறார்.

பெப்சு சர்க்கார் போக்கில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிருப்தி

இந்தி பேசும் மக்களும் எதிர்க்கிறார்கள்

அம்பாலா—

பெப்சுவில், ஆட்சியில் உள்ள காங்கிரசார் செய்துள்ள திறமையற்ற செயல்களால் அவர்களுக்கு இருவிதமான எதிர்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றனவாம்.

சர்க்காருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே சுமுகமான உறவு இல்லையாம்.

சென்ற மந்திரி சபையில் ஒரு தாழ்த்தப்பட்டவருக்கு அமைச்சர் பதவி அளிக்கப்பட்டதென்றும், இப்போதுள்ள மந்திரி சபையில் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லை என்றும், இதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் சர்க்காரின் மீது அதிருப்தி கொண்டுள்ளனர் என்றும் தெரிகிறது.

அடுத்து, மொகின்தர்கா ஜில்லா வாசிகள் சர்க்காரின் மீது வெறுப்புக் கொண்டுள்ளனர் என்று தெரிகிறது.

இப்பகுதி, இந்தி பேசுவோர் வாழும் பகுதி என்றும் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் சர்க்கார் நீர்ப்பாசன திட்டங்கள், சமூக நலத் திட்டங்கள், தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் இவைகளில் எதனையும் இந்தப் பகுதியில் அமுல் செய்யவில்லை என்றும் தெரிகிறது.

இதனால் மொகின்தர்கா ஜில்லா வாசிகள் தங்களை சர்க்கார் அலட்சியம் செய்துவிட்டது என்று கருதுகின்றனராம்.

சர்க்கார் மீது வெறுப்பு கொண்டுள்ள தாழ்த்தப்பட்ட மக்களைத் திருப்திப்படுத்த சர்க்கார் ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தவரைப் பிற்பட்ட வகுப்பினரின் முன்னேற்ற போர்டுக்குத் தலைவராக நியமித்தனர் என்றும், பின்னர் அவரையும் சர்க்கார் டிஸ்மிஸ் செய்துவிட்டனர் என்றும் தெரிகிறது.

கணேசர் கோவில்மீது பாகிஸ்தான் கொடி

குல்பர்காவில் இரண்டு பாகிஸ்தானியர் கைது!

ஹைதராபாத் போலீசார், குல்பர்காவில் உள்ள கணேசர் கோவில்மீது பாகிஸ்தான் கொடியை ஏற்றியதாக இரண்டு பாகிஸ்தானியர்களைக் கைது செய்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சி, குல்பர்காவில் வகுப்புக் கலவரம் நிகழக் காரணமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

முகமது உசைன், சையத் முகபூப் அலி என்ற இரண்டு பாகிஸ்தானியர்களும், ஆகஸ்டு திங்களில், 'விசா' என்னும் அனுமதிச் சீட்டு இல்லாமல், குல்பர்காவில் நுழைந்து, வேறு இரண்டு குல்பர்கா வாசிகளுடன் சேர்ந்து அங்குள்ள கணேசர் கோவிலில் பாகிஸ்தான் கொடியை ஏற்றுவித்தார்கள் என்று கூறப்படுகிறது.

இந்த இருவரையும் ஐந்து நாள் ரிமாண்டில் வைக்குமாறு ஹைதராபாத் மாநில மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

பெப்சு காங்கிரஸ் கரைகிறது!

ராமன் குழுவினர் அகாலி தளத்தில் சேர்ந்தனர்!

பெப்சுவில், சீக்கியர்களில் முன்னேற்றக் கருத்துக்கள் கொண்ட பிரிவினரான ராமன் குழுவினர் மீண்டும் அகாலி தளத்தில் சேர்ந்து விட்டனர் என்று தெரிகிறது.

காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்கு சமீப காலம்வரையில் பாடுபட்ட சாம்புரான் சிங் ராமன், காங்கிரசிலிருந்து விலகி, தன் குழுவினருடன் அகாலி தளத்தில் சேர்ந்து விட்டார் என்று தெரிகிறது.

காங்கிரசின் மேன்மைக்கு உழைத்த ராமன் குழுவினருக்கு பெப்சுவில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் சர்க்கார் எவ்விதமான ஆதரவும் தராமல், சிறுபதவிகளைக்கூட அளிக்க முன்வராமல், எந்தவிதமான குழுவிலும் இடமளிக்காது நடந்து கொண்டதே ராமன் குழுவினர் காங்கிரசிலிருந்து விலகக் காரணமாயிற்று என்று தெரிகிறது.

அகாலி தளத்தில் உள்ள பல்வேறு பிரிவினர்களையும் ஒன்று சேர்க்க கியானிகர்தார் சிங் முயற்சிக்கிறார் என்று கூறப்படுகிறது.

அகாலி தளத்தினர் ஒன்றுபட்டு காங்கிரஸ் சர்க்காரை எதிர்க்க முயற்சிக்கின்றனர் என்று தெரிகிறது.

இப்போது, சிரோமணி அகாலி தளம் என்ற கட்சியின் கரந்தான் பெப்சுவில் வலுத்து வருகிறது என்றும், குருத்துவாரத்தில் அடுத்து நடைபெற இருக்கும் தேர்தலில் போட்டி பலமாக இருக்கும் என்றும் தெரிகிறது.

மக்களின் மனதை மகிழ்ச்சி செய்து, தனக்கு அடுத்துவரும் தேர்தலில் ஆதரவு திரட்ட, பெப்சு காங்கிரஸ் சர்க்கார், விவசாயிகளை நிலங்களிலிருந்து வெளியேற்றுவதைத் தடுத்தும், கரும்பு விலை பற்றியும் இரண்டு அவசரச் சட்டங்களைப் பிரகடனம் செய்துள்ளனர் என்று தெரிகிறது.

அதுபோல், மத்தியதரவர்க்கத்தினரை மகிழ்விக்க, இனிமேல் பெப்சுவில் நிர்வாக, நீதி வேலைகளுக்கான நபர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகவே தேர்ந்தெடுக்கப்படுவர் என்று அறிவித்துள்ளனர்.

மக்கட் பெருக்கமும், வாழ்க்கைத் தர உயர்வுமே பிரச்சினைகள்

தென் கிழக்கு ஆசியா பற்றி கொழும்புதிட்ட மாநாட்டில் முடிவு

ஆட்டாவா, அக். 9—

ஐந்து நாட்களாக நடைபெற்ற கொழும்புத் திட்ட மாநாடு, "ஆசியாவின் முக்கியப் பிரச்சினை, வேகமாக வளர்ந்துவரும் மக்கள் எண்ணிக்கையும், அந்த மக்களின் வாழ்க்கைத் தர உயர்வுமாகும்" என்று குறிப்பிட்டுள்ளது.

அடுத்த 16 ஆண்டுகளில், கொழும்புத் திட்டப் பகுதிகளில் மக்கள் எண்ணிக்கை 15,00,00,000 அதிகமாக, 75,00,00,000 ஆக உயரும் என்று முடிவு காணப்பட்டிருக்கிறது.

தென் கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த இப்பகுதியில், சென்ற ஆண்டில் 154,00,00,000 டாலர்கள் செலவிடப்பட்டுள்ளதாம்; இத்தொகை முன்னைய ஆண்டைவிட 27 சதவிகிதம் அதிகமாகும்.

கடன் மூலமாகவும், நேரடி உதவி மூலமாகவும் இப்பகுதிகளுக்கு 34,20,00,000 டாலர் கிடைத்திருக்கிறதாம்.

எதிர்காலத்தில், இந்த நாடுகள், தங்கள் பிரச்சினைகள் எவை என்பதை நன்றாக உணர்ந்திருக்கின்றன. அவை பற்றி இந்த நாடுகளில் தெளிவற்ற தன்மை எதும் கிடையாது என்று கொழும்புத் திட்ட மாநாடு குறிப்பிட்டுள்ளது.

கொழும்புத் திட்டத்தில், இப்போது ஜப்பானும், சயாமும் சேர்க்கப்பட்டு, மொத்தம் 17 நாடுகள் உள்ளன. தென் கிழக்கு ஆசியாவில் உள்ள கம்யூனிஸ்டு அல்லாத நாடுகள் அனைத்தும் இப்போது கொழும்புத் திட்டத்தில் அங்கம் வகிக்கின்றன.

தொழில் நுணுக்கத் திட்ட உதவிகள் மூலம் தெற்கு, தென் கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த 500-க்கு மேற்பட்டவர்களுக்கு, தங்கள் நாடுகளுக்கு வெளியில் தொழில் நுணுக்கக் கல்வி பயில வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று அந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

குழாயடி பெண்கள் சண்டையின் எதிரொலி

தூத்துக்குடி காங்கிரஸ்காரர் களபலி!

தூத்துக்குடியிலுள்ள தீவிர காங்கிரஸ் வாதியும், நகர காங்கிரஸ் கமிட்டி உறுப்பினருமான வைகுண்டராமத் தேவர் என்பவர், சென்ற 4-ந் தேதியன்று, இரவு 7 மணிக்கு, சிலரால் பலமாகத் தாக்கப்பட்டு, 6-ந் தேதி இரவு சுமார் 2¾ மணிக்கு மருத்துவ மனையில் மரணமடைந்தார். தெருக் குழாய்த் தண்ணீர் தகராறில், பெண்களுக்குள் ஏற்பட்ட சண்டையே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது.

மேலும், வைகுண்டராமத் தேவரைத் தாக்கியவர்கள் அவருடைய உறவினர்களே என்றும் தெரிய வருகிறது.

4-ம் தேதியன்று மாலை 3½ மணிக்கு, அவரது தம்பி சங்கர முத்துத்தேவரை, சிலர் பலமாகத் தாக்கவே, வைகுண்டராமத் தேவர் அவரை அழைத்துக் கொண்டு தூத்துக்குடி வடபாகம் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று புகார் செய்துவிட்டு, இருவரும் மருத்துவ மனைக்குச் சென்றார்களாம். மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டு வீடு திரும்புகிற வழியில், சிலர் அவர்களிருவரையும் மறித்து, வைகுண்டராமத்தேவரை அடித்ததுடன், பிச்சுவாவினால் அவரது வயிற்றின் வலது பக்கத்தில் பலமாகக் குத்தினார்களாம்.

மருத்துவ மனையில் அளிக்கப்பட்ட சிகிச்சைகளில் எதுவும் பிரயோசனப்படாமற் போகவே, 6-ந் தேதி இரவு சுமார் 2¾ மணிக்கு அவர் மரணமடைந்தார்.

சோவியத் தூதுக் குழு இஸ்ரேல் வரத் தடை!

உபசரிப்பு இருநாட்டிலும் தேவையாம்!

இஸ்ரேல் சர்க்கார் அறிக்கை

இஸ்ரேலுக்கு வர இருந்த ஆறு பேர் கொண்ட சோவியத் தூதுக் குழு ஒன்றை இஸ்ரேல் சர்க்கார் தனது நாட்டிற்குள் வரக்கூடாது என தடைவிதித்துள்ளனர் என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த சோவியத் தூதுக் குழு, இஸ்ரேலிய கம்யூனிஸ்டுகளின் அழைப்பின் பேரில் இஸ்ரேலுக்கு வர இருந்தது.

இந்த வார இறுதியில் டெல் அவீவில் நடைபெற இருந்த 'இஸ்ரேல் — சோவியத் நட்புக் கழக'த்தின் மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்த சோவியத் தூதுக் குழு ஒன்றிற்கு 'விசா' அனுமதி மறுக்கப்பட்டது என்று இஸ்ரேல் வெளிநாட்டிலாகா அறிவித்தது.

'இதுபோன்ற அழைப்புகளும், தூதுக் குழுவின் வரவுகளும், இருதரப்பினரிடையேயும் நடைபெறவேண்டும்,' என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

இஸ்ரேல் சர்க்கார் சோவியத் யூனியனிலிருந்து விருந்தினர்களை அன்புடன் அழைத்து உபசரிக்க தயாராக இருக்கிறது என்றும், ஆனால், இஸ்ரேலிலிருந்து, சோவியத் யூனியன், விருந்தினர்களைத் தனது நாட்டிற்கு அழைத்தால், சோவியத் யூனியனிலிருந்து விருந்தினர்களை இஸ்ரேலுக்கு வரவேற்பதில் சர்க்கார் விருப்பம் கொள்ளும் என்றும், இஸ்ரேல் சர்க்கார் மேலும் அந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

இஸ்ரேலுக்கு வர இருந்த சோவியத் தூதுக் குழு, ஸ்டாலின் பரிசு பெற்றவரும், சிறந்த எழுத்தாளருமான சப்ரேநோவ் என்பவரின் தலைமையில் புறப்பட இருந்தனர்,

அக்.13: பிரெஞ்சிந்திய அதிகார மாற்றம்?

புதுச்சேரி, அக். 11—

பிரெஞ்சிந்திய அதிகார மாற்றம் பற்றி, இந்தியா—பிரெஞ்சு சர்க்கார்களுக்கிடையே ஏற்பட்டுள்ள உடன்பாடுகளைப் பரிசீலனை செய்ய, பிரெஞ்சிந்தியக் கீழ்சபை உறுப்பினர்களும், நகர சபை உறுப்பினர்களும் அடங்கிய கூட்டம் ஒன்று, இம்மாதம் 18-ந் தேதி கீழூரில் நடைபெறுமென்று தெரிகிறது.

பிரெஞ்சிந்தியா பற்றிய கூட்டறிக்கையொன்று வருகிற 13-ம் தேதியன்று வெளியிடப்படலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தியாகி நிலங்களுக்கு ஆபத்து!

60 பேருக்குத் தண்டனை!

தியாகிகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களில் அத்துமீறி பிரவேசித்து ஆக்கிரமித்துக் கொண்டதாக, கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதரவைக் கொண்ட குண்டூர் மாவட்டப் பஞ்சார் நிலங்கள் நேரடி நடவடிக்கைக் குழுவினரைச் சேர்ந்த 60 சத்தியாக்கிரகிகள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களுக்கு தலா 6 மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

ரஷியாவுடன் உடன்பாடு காண பிரிட்டிஷ் பிரதமர் முயற்சி

லண்டன், அக். 11—

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும், பிரிட்டிஷ் அயல் நாட்டு அமைச்சர் ஈடனும், இந்த ஆண்டு இறுதிக்குள், ரஷியாவுடன் ஒரு தெளிவான உடன்பாடு செய்துகொள்ள முன்வரலாம் என்று செய்திகள் கூறுகின்றன.

பிரிட்டனில் பத்திரிகைகள் - வெளியாகவில்லை!

'டெய்லி ஸ்கெட்ச்' வேலை நிறுத்தத்தின் விளைவு

லண்டன், அக். 11—

பிரிட்டனின் கன்சர்வேடிவ் பத்திரிகையான 'டெய்லி ஸ்கெட்ச்' அலுவலகத்தில் வேலை நிறுத்தம் ஏற்பட்டதை ஒட்டி பிரிட்டனில் இன்று பத்திரிகைகள் ஏதும் வெளிவரவில்லை.

இன்று காலை, பிரிட்டிஷ் மக்கள், பத்திரிகைகள் ஏதும் கிடைக்காதது கண்டு திகைத்துப் போயினர்.

தற்போது நாள் ஒன்றுக்கு 1½ கோடி தினசரி இதழ்கள் வெளியாகின்றன.

'டெய்லி ஸ்கெட்ச்' என்ற பத்திரிகாலயத்தில் ஏற்பட்ட வேலை நிறுத்தத்தினால் அந்தப் பத்திரிகை இன்று வெளியாகவில்லை.

பிரிட்டனில், பத்திரிகை வெளியிடுவோரிடையே, ஒரு பத்திரிகையில் வேலை நிறுத்தம் காரணமாக வெளியீடு நிறுத்தப்படுகிறது என்றால், அன்று, பிரிட்டனில் எல்லா பத்திரிகைகளும் தங்கள் வெளியீடுகளை நிறுத்துவது என்ற பழக்கம் ஒன்று உள்ளது. இதன்படி, இன்று மாலையும் பத்திரிகைகள் வெளிவராது என்று தெரிகிறது.

'டெய்லி ஸ்கெட்ச்' இதழின் நிர்வாகத்தை, சென்ற ஆண்டில் செம்ஸ்லி நிறுவனத்திடமிருந்து அசோசியேடட் நிலையத்தார் வாங்கியுள்ளனர்: அன்று முதல், அங்கே, 'பத்திரிகை அச்சிடும் இயந்திரத்தை யார் இயக்குவது,' என்பது பற்றிய தகராறு வளர்ந்து வந்தது.

பிரிட்டனில் இன்று தினசரிகள் வெளியாகாத செய்தியை பிரிட்டனின் வானொலியான பி. பி. சி. மக்களுக்கு அறிவித்தது.

இன்று இரவு வெளியான செய்தியொன்று, வேலை நிறுத்தம் நின்று, ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டமையால் பத்திரிகைகள் நாளை காலை வெளியாகுமென்று கூறுகிறது.

தோழர் மு. கருணாநிதி மீர்சாகிப் பேட்டை தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரையின் சாரம் நாளை இதழில் வெளிவரும்.

பாங்கி ஊழியர் தகராறு!

வட்டமேஜை மாநாட்டில் விவாதிக்க யோசனை!

அகில இந்திய பாங்கி ஊழியர் சங்க பொதுச் செயலாளரான தோழர் பிரபத்கார், பாங்கி ஊழியர்கள் தகராரைத் தீர்ப்பதற்கு, பாங்கி ஊழியர்களும், பாங்கி முதலாளிகளும் ஒரு வட்டமேஜை மாநாட்டில் கலந்துபேசவேண்டும் என்று கருத்தறிவித்துள்ளார்.

கடந்த ஏழாண்டு காலத்தில், எந்தவிதமான 'டிரிபியூனலும்' இந்தப் பாங்கி ஊழியர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான பரிகாரத்தைத் தேடித்தர முடியவில்லை என்றும், தோழர் கார், தான் இந்திய பாங்கி முதலாளிகள் சங்கத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில்குறிப்பிட்டுள்ளார்.

பாங்கி ஊழியர் சங்கமும், பாங்கி முதலாளிகள் சங்கமும் ஒன்றாகக் கூடி, தொழில் கோர்ட்டு அளித்த தீர்ப்பை அடிப்படையாகவைத்துப் பேசினால், நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்காததும், பாங்கித் தொழிலுக்குத் குந்தகம் விளைவிக்காததுமான ஒரு நல்ல முடிவு காண முடியும் என்று தான் நம்புவதாகவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிதரின் ஒற்றுமை கீதம்.....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்? அவர், 'இந்த வாசகங்களைக் கூறினால் ஆபத்தில்லை,' என்று எண்ணியதால்தான் கூறினார்.

இன்று நாம் இருக்கிறோம்; அன்று, பண்டிதர் இந்த வாசகங்களை எழுதிய நாட்களில் நாம்—தி. மு. கழகம் இல்லை; அதனால்தான், தைரியமாகக் கூறினார்.

இந்த வேறுபாட்டைக் காட்டித்தான், நாம், 'நமது லட்சியமாக, 'திராவிட நாடு திராவிடர்க்காக வேண்டும்,' என்று கொண்டிருக்கிறோம்.

வடவர்கள் வேறு; திராவிடர்கள் வேறு—இனத்தால், கலாச்சாரப் பண்பாட்டால், நாகரீகத்தால்!

இதை, நமது மாற்றுக் கட்சி நண்பர்கள் உணரவேண்டும்.

காங்கிரஸ்காரர்களும், கம்யூனிஸ்டுகளும், 'இந்தியா ஒன்று' என்ற அடிப்படையில் ஒன்றுபட்டவர்கள்; வேண்டுமானால், அந்த 'ஒன்றான இந்தியா'வில் எத்தகைய ஆட்சி வேண்டுமென்பதில் வேறு பட்டவர்களாயிருக்கலாம்; ஆனால், நம்மைத் தனித்துப் பிரித்து உயர்த்திக் காட்டுவது, நாம் இவர்களின் 'இந்தியா ஒன்று' என்ற அடிப்படையை மறுப்பவர்கள்—உண்மைகளைக் காட்டி! அவர்கள், 'இந்தியா ஒன்று,' என்று பொய் கூறித் திரிபவர்கள்.

இந்தியாவிற்கு விடுதலை கிடைத்து விட்டது என்று சொல்லுகிறார்கள்.

தென்னாட்டைப் பொறுத்த வரையில், அவர்கள் மீது இருந்த ஆதிக்கம், வேறு ஒரு மட்டமான எஜமானன் கைக்கு மாறியிருக்கிறது. அந்த எஜமானனிடமிருந்து—வடநாட்டவரிடமிருந்து நாம் தனித்து, நமது நாட்டை நாமே ஆள்கிற நாள் தான் இந்த நாட்டின் விடுதலை நாளாக முடியும்.

இந்த விடுதலையை நாம் கோருவதற்குக் காரணம், தென்னாட்டவர்க்கு நிரந்தரமானதோர் நல்வாழ்வுதர வேண்டுமென்பதற்காகத்தான்.

வடவருடன் நாம் இருப்பதால் நமக்கு நிச்சயமாக நல்வாழ்வு கிடைக்காது. இதுவரை, கடந்த காலத்தில் கிடைக்கவில்லை; இனியும் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது ஏமாளித்தனம்!

நாம் இந்த விடுதலையை வெறும் உணர்ச்சி வயப்பட்டுச் சொல்லவில்லை; 'விடுதலையைப் பெற்றவர்கள் மட்டுமே நல்வாழ்வு பெற முடியும்,' என்ற உண்மையை நன்கு உணர்ந்திருப்பதினால்தான், உரிமைக்குரல் எழுப்புகிறோம்.

அந்த நல்வாழ்வை திராவிடர்கள் பெற்றுக் கொள்வதற்காக, 'தி. மு. கழகம்' என்ற வாள் தயாராகிவிட்டது; இனி அந்த வாளை நினைத்த பக்கமெல்லாம் வேண்டிய போது திருப்பி உபயோகித்து விடுதலையைப் பெறுவதற்காக, அந்த வாளுக்கு நல்ல 'பிடி' வேண்டும்; அந்தப் 'பிடி'தான் கழகம், ஸ்தாபன ரீதியாக வெகுவாகப் பலப்படுத்தப்பட வேண்டுமென்பது! அந்தப் 'பிடி'யும் செய்துவிட்டால், அந்த வாளின் சுழற்சியை எந்த சக்தியும் எதிர்த்து நிற்க முடியாது. வாளுக்குப் 'பிடி' போட்டதும், திராவிடர் விடுதலை பெறப் போகிறார்கள்! நல்வாழ்வு கிடைக்கவிருக்கிறது அவர்களுக்கு! அந்த விடுதலை வாழ்வு பெறும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது!"

தோழர் அம்பில் தர்மலிங்கத்திற்கு பாராட்டுக் கூட்டம்

லால்குடி, அக். 11—

திருச்சி லால்குடி வட்டத்தில் நடைபெற்ற திருச்சி மாவட்ட மன்றத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் தோழர் ராஜா சிதம்பரத்தை எதிர்த்து வெற்றி பெற்ற தோழர் அம்பில் தர்மலிங்கத்தைப் பாராட்டி, 10—10—54 மாலை 6 மணிக்கு, லால்குடி சிவன் கோவில் முன், லால்குடி திராவிட கழகத் தலைவர் தோழர் முத்துக்கண்ணு தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

அதுசமயம் தோழர்கள் சி. பி. சிற்றரசு, எம். எஸ். மணி, எஸ். நெடுமாறன், டி. பி. அழகமுத்து, பாஸ்கரன், புலவர் த. மா. திருநாவுக்கரசு, ஆர். நாகசுந்தரம், எஸ். ஏ. ஜி. ராபி முதலானோர் பாராட்டி பேசினார்கள். அதுசமயம் தொழிற் சங்கங்களின் சார்பிலும், விவசாய சங்கங்களின் சார்பிலும், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின் சார்பிலும், வாசக மன்றங்களின் சார்பிலும், தனிப்பட்டோர்களாலும் ஏராளமான மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன. தோழர் அம்பில் தர்மலிங்கம் தனது வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் நன்றி கூறி கூட்டம் முடிவுற்றது.

இரா. நெடுஞ்செழியன் இலங்கைப் பயணம்

விமான நிலையத்தில் வழி அனுப்புதல்

சென்னை, அக். 12—

திராவிட முன்னேற்றக் கழகத் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 14—10—54 காலை 11-45 மணிக்கு 'ஏர் சிலோன்' விமானத்தில் சென்னை, மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு இலங்கை செல்வார்.

அவரை திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் விமான நிலையத்தில வழி அனுப்பி வைப்பார்கள்.

சென்னை நகர வட்டக் கிளைக் கழகத் தோழர்களும் வழி அனுப்பி வைக்கும் நிகழ்ச்சியில் கலந்து கோள்வார்கள்.

காந்தியார் படத் திறப்பு விழா

இரா. நெடுஞ்செழியன் பேச்சு

2—10—54 மாலை 5½ மணிக்கு சேலூர் ஊராட்சி மன்றத்தில், காந்தியாரின் உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசிய தோழர் இரா. நெடுஞ்செழியன், காந்தியார் காங்கிரசில் நுழைவதற்கு முன் அது இருந்த நிலைபற்றியும், அவர் நுழைந்த பின் ஏற்பட்ட நிலைகளையும், இப்போது காங்கிரசார், எந்த அளவு காந்தியாருக்கு மரியாதை கொடுக்கின்றனர் என்பது பற்றியும் விளக்கமாகப் பேசினார்,

கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஊராண்மைக் கழகத் துணைத் தலைவர் திரு. எஸ். ஏ. கோவிந்தராசு அவர்கள், தோழர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்து வழங்கினார்.

கூட்டத்திற்கு முன்னால், தோழர் நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றுப் பெரியதோர் ஊர்வலம் நடைபெற்றது.

இடம் பெயர்ந்த மக்கள் தொகை

பாகிஸ்தானிலிருந்து 73 லட்சம் பேர் இந்தியாவுக்கு வந்தனர்!

இந்திய ரிஜிஸ்திரார் ஜெனரல் காரியாலயத்திலிருந்து வெளியாகியுள்ள இடம் பெயர்ந்த மக்களின் தொகை பற்றிய புள்ளி விவரக் கணக்கிலிருந்து, சுமார் 73 லட்சம் பேர் பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்து சேர்ந்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

1951-ம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, இடம் பெயர்ந்த மக்களின் மொத்த எண்ணிக்கை 73 லட்சம். இவர்களில், 47 லட்சம் பேர் மேற்கு பாகிஸ்தானிலிருந்தும், 26 லட்சம் பேர் கிழக்கு பாகிஸ்தானிலிருந்தும் வந்தவர்களாவர்.

1947-ல், ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களில் வந்தவர்களின் எண்ணிக்கை மட்டும், மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பாகமாகும்.

இடம் பெயர்ந்தோர்களில், ஆண்—பெண் விகிதம், 1000-க்கு 781 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த 73 லட்சம் பேர்களில், மேற்கு வங்கத்திற்கு 20.99 லட்சமும், பஞ்சாப் மாநிலத்துக்கு 23·76 லட்சமும் உ. பி.-க்கு 4.80 லட்சமும், அசாமுக்கு 2.74 லட்சமும், திரிபுராவுக்கு 1.01 லட்சமும், பம்பாய்க்கு 3.38 லட்சமும், ம. பிரதேசத்திற்கு 1.12 லட்சமும், ராஜஸ்தானுக்கு 2.97 லட்சமும், பெப்சுவுக்கு 3.56 லட்சமும், டெல்லிக்கு 4.95 லட்சமும் பிரித்து அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்த மொத்தத் தொகையில் நகர பிரதேசங்களில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 54 சதவிகிதம் என்று தெரிகிறது. மற்ற பேர்கள் கிராமங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மாளிகையில் துன்பமாம்!

மண் குடிசையில் இன்பமாம்!

ஆடம்பரம் மிகுந்த அரண்மனை போன்ற "ராஷ்ட்ரபதி பவனத்"தில், தன்னால் மகிழ்ச்சியுடன் வாழ முடியவில்லை என்று குடியரசுத் தலைவர் ராசேந்திரர் கூறினர்.

காந்தியாரின் சிலை ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில், அவர், "மனிதனின் அன்றாடத் தேவைகளுக்குப் புறம்பான ஆடம்பரமான வசதிகள் இல்லாது, வாழ்வில் இன்பம் காண்பதென்பது ஒரு மனிதனால் முடியாததல்ல,"

"எளிய வாழ்க்கையும், உயர்ந்த சிந்தனையும் வேண்டும்; இந்த உண்மையை காந்தியார் தன் வாழ்நாளில் கடைபிடித்தார். அவர் ஒரு குடிசையில் எவ்வளவு இன்பம் துய்த்தாரோ, அவ்வளவு இன்பத்தை அவரது சீடர்களிலே ஒருவனான என்னால், ஆடம்பரமான 'ராஷ்டிரபதி பவனில்' கூட துய்க்க முடியவில்லை," என்று குறிப்பிட்டார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் பீகார், ஒரிசா ஆகிய இடங்களிலிருக்கும் அகதிகளின் துயரங்களை சம்பந்தப்பட்ட அரசாங்கங்களுக்கு எடுத்துக் கூறி பரிகாரம் தேடுவதாயும் வாக்களித்ததாகத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.